திருப்பப்பட்டு இருந்தால், அந்த ஆட்சேபணையைச் சொல்லலாம். அப்படியில்லை நிலைமை. இப்பொழுது கொடுத்தால்கூட திருத்தங்களை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அதில் எந்தவித மான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

3. நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கையில் அது சம்பந்தமாக ஓர் உறுப்பினருடைய குற்றச்சாட்டு பற்றி குழு அமைத்தல் குறித்த தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினைபோன்று—அது உரிமைப் பிரச்சினை இல்லை—ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். 13-ம் தேதியன்று, திரு. சிவ சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, குறுக்கிட்டு, திரு. ஞான சம்பந்தன், கீழ்வெண்மணி நிகழ்ச்சியில் காங்கிரஸ்காரர்கள்தான் பிரதான சக்தியாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார் கள். அதற்கு, 'அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள முடியுமா' என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து கேட்கப்பட்டது. திரு. ஞானசம்பந்தன், 'பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்' என்று சொன்னார்கள். அப்படிப் பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால், ஒரு குழு அமைக்க முடியுமா என்று கேட்டதற்கு, 'குழு அமைக்க முடியும்' என்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு கொடுத்தார்கள். அதை ஒட்டி, திரு. சுப்பராஜா, கீழ் வெண்மணி நிகழ்ச்சி வழக்கு மன்றத்தில் இருக்கும்போது, குழு அமைப்பது நம்முடைய விதிமுறைப்படி மாறு பாடாக இருக்காதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதன் மேல் நான் தீர்ப்பு அளிப்பதாகக் கூறியிருக்கிறேன்.

நம்முடைய சபாநாயகர்கள் கூடிய மாநாட்டில் இப்படிப்பட்ட பிரச்சினை ஆராயப்பட்டது. அந்த நேரத்தில் அம் மாநாட்டிற்கு தலைமை வகித்த, பார்லிமெண்ட் ஸ்பீக்கர், திரு. ரெட்டியார் அவர்கள், நம் முடைய உறுப்பினர்களுக்கு, வழக்கு மன்றத்தில் இருக்கிறது ஒரு பிரச்சினை என்பதற்காக விவாதிக்கக்கூடாது என்று தடைபோட்டு, ஒரு முக்கியமான நிகழ்ச்சியைப்பற்றி இந்த மன்றத்திலே விவாதிக்க உரிமை மறுப்பது முறையாகாது என்று கூறி, அதே நேரத்தில், அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும்போது, நிகழ்ச்சிகளுக்கு விளக்கமாக வழக்கின் உட்புகுந்து பேசத் தடை விதிக்கவேண்டும், மேலெழுந்த வாரியாக வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று விவாதத்தை மறுத்துவிடக்கூடாது என்று கருத்துப்பட கருத்துத் தெரிவித்திருக்கி றார்கள். இதை அந்தப் பேரவைத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள்.

முற்பகல்
10—30

"While on the one hand the Chair has to ensure that no discussion in the House tends to prejudice the course of justice, the Chair has to see that the House is not debarred from discussing an urgent matter of public importance on the ground that a similar allied or linked matter is before a court of law. The test of *subjudice* in my opinion should be that the matter sought to be raised in the House is substantially identical with the one on which a court of law has to adjudicate." என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்த முறையில் திரு. கொ. இர. ஞானசம்பந்தன் அவர்கள், அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்ற பொதுவான குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பொறுப்பு ஏற்று குழு அமைக்கிறோம் என்று சொல்லியிருக் கிறோம். குழு அமைக்க வேண்டுமென்று கோருவது நடைமுறையில் இருக்கிற வழக்குமன்ற நிகழ்ச்சிக்கு எந்தவிதமான குறுக்கீடும் இல்லாத காரணத்தால் அதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை யென்று தீர்ப்பு அளிக்கிறேன்.